# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 09 - நேரம்:30 நிமிடம்

## விடைப்பத்திரம்: புன்னை என்னும் தங்கை

**தயாரிப்பு : திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class), Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளர் இசை கடுப்ப
வலம்புரி வான் கோடு நரலும் இலங்கு நீர்
துறைகெழு கொண்க நீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா உளவே.

<u>வினாத்தொகுதி:01</u>

**(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.**

- **திணை:** நெய்தல் திணை
- **துறை:** பகற்குறிவந்த தலைமகனை தோழி வரைவு கடாயது:பகலில் தலைவியை சந்திக்க வந்த தலைவனை நோக்கி அவ்வாறு சந்திப்பதில் உள்ள இடைஞ்சலை விளக்கிய தோழி தலைவியோடு பகற் குறியில் சந்தித்தலை தவிர்த்து விரைவாக தலைவியை மணம் செய்து கொள்ளவேண்டியதன் அவசியத்தை தலைமகனுக்கு உணர்த்தியது.

**(04 புள்ளிகள்)**

**(ii) பாடலின் பின்வரும் தொடர்களுக்கு பொருள் தருக.**

- தீம்பால்-இனிய பால்
- நுவ்வை-உன் தங்கை
- கோடு- சங்கு
- ஆயம்-தோழியர் கூட்டம்

**(04 புள்ளிகள்)**

**(iii) தோழி பகற் குறியை மறுத்தற்குரிய காரணம் யாது?**

- எம்மால் நெய்யுடன் கூடிய இனியபாலை ஊற்றி வளர்க்கப்பட்ட புன்னையை எம் தாய்‘‘உங்களையும் விட உங்கள் தங்கை சிறந்தவள்’’ என்றுரைத்தார். இதனால் எம் தங்கை போன்ற புன்னை மர நிழலின் கீழ் உன்னோடு சிரித்து மகிழ்வது தவறு – பிழை.
- உடன் பிறந்தார் சுற்றத்தார் அயலில் உள்ளபோது தலைவனோடு மகிழ்ந்துரையாடுவது தகுதியற்ற செயல் என்று கூறி பகற் குறியை மறுத்தாள்.
- தலைவியோடு பேசி மகிழ விரும்பினால் திருமணம் செய்வதை தவிர வேறு வழியில்லை என்பதற்காகவும் தோழி பகற் குறியை மறுத்தாள்

**(04 புள்ளிகள்)(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:02</u>

**(i) இப்பாடல் யாரால் யாருக்கு கூறப்பட்டதெனக்குறிப்பிடுக.**

- **கூற்று:** தலைமகனுக்கு தோழி கூறியது:காதலியைப் பார்க்க வருகிறான் காதலன். ‘அவள் உன்னைச் சந்திக்கமாட்டாள்’ என்கிறாள் தோழி. ‘ஏன்?’ என்று பரிதாபமாகக் கேட்கும் காதலனுக்குத் தோழி சொல்லும் பதில்.

**(04 புள்ளிகள்)**

**(ii) கையாளப்பட்ட அணி : உவமையணியினை எடுத்துக்காட்டுக.**

- புதிதாய் வந்த பாணர் பாடுகின்ற இசைப்பாடல் போல வெள்ளிய வலம்புரிச் சங்கு ஒலிக்கும்:கடற்துறையில் வலம்புரிச்சங்கிலிருந்து எழும் ஒலிக்கு புதிய பாணர்கள் எழுப்புகின்ற மெல்லிய இசை உவமையாக்கப்பட்டுள்ளது.
  - = உவமானம் : விருந்திற் பாணர் விளரிசை
  - = உவமேயம் : வலம்புரி வான்கோடு தரளுதல்
  - = பொதுத்தன்மை : வலம்புரிச்சங்கிலிருந்து இயற்கையாகவே எழுகின்ற மென்மையும், இனிமையும் பொருந்திய இசை.

**(04 புள்ளிகள்)**

**(iii) தலைவியைச் சந்திப்பதிலுள்ள இடைஞ்சலை புலப்படுத்தும் தோழியின் மதிநுட்பம் இப்பாடலில் எவ்வாறு துலங்குகின்றது?**

- தலைவனின் **மனம் புண்படாதவாறு** பகற் குறியை மறுத்துரைத்தலில் இருந்தும்
- பகலில் தலைவியை சந்திப்பதில் உள்ள **இடர்பாடான**(புன்னை மர நிழலில் சந்திக்க முடியாமை) **நிலையை** எடுத்துரைப்பதிலிருந்தும்,
- **புன்னை மரத்தை கருப்பொருளாக கொண்டு** எதனால் - எதன் காரணமாக தலைவி பகற் குறிக்கு ஆஞ்சுவதாக குறிப்பிட்டு தலைவன் ஊரறிய திருமணம் செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுதுவதிலிருந்தும்,
- **பகலில் சந்திப்பதற்கு ஏற்ற வேறு நிழல் இல்லை என** பகற்குறிச் சூழலை எடுத்துரைப்பதிலிருந்தும்,
- **உடன் பிறந்தார் அருகில் உள்ளபோது** (தங்கையாகிய புன்னை மரம்) தலைவனுடன் காதற் சல்லாப உரையாடுவது தகுதியற்றது என்பதை எடுத்துரைப்பதிலிருந்தும்,
- நாம் நட்ட புன்னை மரம் தம் தங்கை என அன்னை கூறியதாக **அன்னையை முன்னிறுத்தி**க்கூறுவதிலிருந்தும்,
- தலைவியோடு பேசி மகிழ விரும்பினால் திருமணம் செய்வதை தவிர வேறு வழியில்லை என்பதை குறிப்புப் பொருளால் உணர்த்துவதிலிருந்தும், **தோழியின் மதிநுட்பம் புலப்படும்.**

**(04 புள்ளிகள்)**
**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:03</u>

**(i) பாடல் குறிப்பிடும் நெய்தல் நிலம் பற்றிய செய்திகள் யாவை?**

- வலம்புரியமைந்த வெண்ணிறமான சங்குகள் ஒலியெழுப்புகின்ற நீர்த்துறையுடையது
- புன்னை மர விதைகள் முளைத்து மரமாக வளர்ந்து நிற்கும் துறை

**(04 புள்ளிகள்)**

**(ii)இப்பாடல் வழியாக நாமறிந்து கொள்ள வேண்டியதும்,வலியுறுத்தப்படுவர்மான செய்தியக் யாவை?**

- தாவரங்கள் உறவாக மதிக்கப்பட்ட காலம் சங்ககாலம் என்பதையும்..
- தங்கையின் அருகிலே நின்று காதலனோடு சல்லாபிப்பது முறையானதன்று.
- மரங்களை நாம் உறவாக மதிக்காவிட்டாலும் உயிராகவாவது மதிக்கவேண்டும் என்பதும்.

**(04 புள்ளிகள்)**

**(iii) தலைவி தொடர்பான நலனில் தோழியின் உரையாடல் மதிநுட்ப வகிபாகம் புலப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.**

- தலைவனின் மனம் புண்படாதவாறு பகற் குறியை மறுத்துரைத்தல்:

- பகலில் தலைவியை சந்திப்பதில் உள்ள இடர்பாடான(புன்னை மர நிழலில் சந்திக்க முடியாமை) நிலையை எடுத்துரைத்து,
- புன்னை மரத்தை கருப்பொருளாக கொண்டு எதனால் - எதன் காரணமாக தலைவி பகற் குறிக்கு ஆஞ்சுவதாக குறிப்பிட்டு தலைவன் ஊரறிய திருமணம் செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி,
- பகலில் சந்திப்பதற்கு ஏற்ற வேறு நிழல் இல்லை என பகற்குறிச் சூழலை எடுத்துரைத்தது,
- உடன் பிறந்தார் அருகில் உள்ளபோது (தங்கையாகிய புன்னை மரம்) தலைவனுடன் காதற் சல்லாப உரையாடுவது தகுதியற்றது என்பதை எடுத்துரைத்தது,
- நாம் நட்ட புன்னை மரம் தம் தங்கை என அன்னை கூறியதாக அன்னையை முன்னிறுத்தி,
- தலைவியோடு பேசி மகிழ விரும்பினால் திருமணம் செய்வதை தவிர வேறு வழியில்லை என்பதை குறிப்புப் பொருளால் உணர்த்தி.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:04</u>

**(i) இப்பாடல் வெளிப்படுத்தும் பேசு பொருள் யாதெனக்குறிப்பிடுக.**

- பகலில் தலைவியைச்சந்திக்க வந்த தலைமகனை நோக்கி,அவ்வாறு சந்திப்பதிலுள்ள இடஞ்சலை விளக்கிய தோழி, விரைவாக திருமணம் முடித்துக்கொள்ளுமாறு அவனை வலியுறுத்தியது.

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.**

- விருந்திற் பாணர் - புதியராய் வந்த பாணர்
- வான் - கேண்மை,நட்பு
- இலங்குநீர் - விளங்கு நீர்
- விளர் - இளமை,மென்மை

**(04 புள்ளிகள்)**

**(iii) இப்பாடல் புலப்படுத்தும் சங்ககால அகத்திணைப் பண்புகள் நான்கினை எடுத்துக்காட்டுக.**

- நெய்தல் நிலத்துக்குரிய இரங்கல் ஒழுக்கம் கூறப்படுதல்
- பகற்குறி மறுக்கப்பட்டு விரைந்து திருமணம் செய்து கொள்ளுமாறு கூறும் துறையாக அமைவது
- நெய்தல் நில தோழி கூற்றாக பெயர் சுட்டாமல் அமைந்தது
- புன்னை மரம், வலம்புரிச்சங்கு பாற்பொருள் பாணர் முதலான கருப்பொருட்களை கொண்டிருப்பது
- ‘‘நிறைபடு நிழல் பிறவுமலர் உளவே’’ என குறிப்புப் பொருளை கையாண்டு வரைவு கடாவுதலை உணர்த்துதல்

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:05</u>

**(i) செய்யுளில் இடம்பெறும் சிறப்புக்களையும் உத்திகளையும் எடுத்துக்காட்டுக.**

- தலைவியோடு பகற்குறியில் சந்தித்தலைத் தவிர்த்து, வரைவு கடாவுதலின் அவசியத்தைத் தோழி தலைவனுக்கு உணர்த்துதல்.

- உறவினராகிய புன்னை நிழற் கீழ் விளையாடி மகிழ்வதற்கு நாணமடைகின்றோம், என்று கூறுவதனால் தலைவன், தலைவி களவு ஒழுக்கத்தை (காதல்) ஊரார் அறிந்து கொள்வதாகிய அலர் தூற்றுதலையும் அதனாற் பகற் குறியிடத்து தலைவனைச் சந்திக்க அஞ்சுவதையும் கூறி,விரைவாகத் தலைவியை மணஞ் செய்து கொள்ளுமாறு தலைவனுக்குத் தோழி கூறுகிறாள்.
- தலைவனது நாட்டுச் சூழலை விபரித்து உரைத்தல்.

= புன்னை மரத்தைக் கருப்பொருளாகக் கொண்டு, குறிப்பால் உணர்த்துதல்.**“ நிறைபடு நிழல் பிறவுமா உளவே”** என குறிபெயர்தலைக் குறிப்பிட்டு வரைவு கடாவுதலை உணர்த்துதல்.

= உவமை அணி கையாளப்படல்:‘‘ புதிதாய் வந்த பாணர் பாடுகின்ற இசைப் பாடல் போல வெள்ளிய வலம்புரிச் சங்கு ஒலிக்கும்’’

= புன்னை மரத்தை கருப்பொருளாகக் கொண்டு , அதன் காரணமாக தலைவி பகற்குறிக்கு அஞ்சுவதைக் குறிப்பிடல்.

= தலைவன் ஊரறியத் திருமணம் செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தல்.

**(04 புள்ளிகள்)**

**(ii) தலைவியை ஒலியெழுப்பும் சங்காக குறிபிட்டதன் கருத்துநிலைபற்றி ஆராய்க.**

| **ஒலியெழுப்பும் வலம் புரிச்சங்கு** | **நெய்தல் நிலத்தலைவி** |
|---|---|
| ஒலியெழுப்புவது | தலைவன் தினமும் பகற்குறியுடன் வருகிறானே அயலவர் பழ் தூற்றுவரே, திருமணத்தை நீட்டிக்குறானே தங்கையை சிறந்தவள் என்கிறார்களே என வருந்தும் தலைவியின் |
| அபூர்வமான வலம்புரி | அழகும் அபூர்வமானதும்கிடைத்தற்கரியதுமான வெண்ணிறமானதும், கவர்ச்சிகரமானதும் மென்மையும் நிறைந்த பெருமை வாய்ந்தவள். |
| கடற்துறைக்கு சொந்தமானது | தலைவி நெய்தல் நில தலைவனுக்கே சொந்தமானவள். |
| குறிப்புப் பொருள்: | தனக்கு சொந்தமானதை தான் ஏன் களவு காதலாக பகற்குறியில் அனுபவிக்க வேண்டும் திருமணம் செய்து கொண்டால் மிக உரிமையுடன் சமூக அங்கிகாரத்துடன் சொந்தமாக எப்படியும் எங்கும் அனுபவிக்கலாம் என்ற குறிப்பு பொருள் உணர்த்தப்படுகின்றது. |

**(04 புள்ளிகள்)**

**(iii)** இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- காழ் - புன்னை,விதை,கொட்டை,பருப்பு
- அகைய - வேரூன்றி முளை தோன்ற,தளிர்க்க,முளைக்க,வளர,முளைவிட,வெளிப்பட,துளிர்விட
- விளர் - இளமை,மென்மை
- நரலும் - ஒலிக்கும்,கத்தும்,இசைக்கும்,ஒலியெழுப்பும்,சத்தமிடும்

**(04 புள்ளிகள்)**
**(12 புள்ளிகள்)**